## தலைவரின் செய்தி

அன்புக்குரிய பங்குதார்களே,

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தலைவராக இருப்பதை நான் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும் பெறுமையாகவும் கருதுகின்றேன். கடந்த ஆண்டு மற்றும் எதிர்காலம் பற்றிய புதுப்பித்தலை உங்களுக்கு வழங்கவுள்ளேன். வரலாற்று ரீதியாக, நிதி மற்றும் ஏனைய விடயங்களிலும் நாம் அடைந்த வெற்றிகள் தொடர்பிலும், எதிர்காலத்திற்கு முகம்கொடுப்பதற்கு நாம் எவ்வாறு சிறப்பான நிலைப்படுத்தியுள்ளோம் என்ற சுருக்கத்தை உங்களுக்கு வழங்குவதிலும் நாம் எப்பொழுதும் பெறுமைகொள்கின்றேன். உண்மையில், இந்த வருடம் எமது நிதி வெற்றிகள் குறித்தான கதையம்சத்தில் குறித்த செய்தி சற்று வித்தியாசமானது. வரிக்கு முன்னர் குழுமம் வீழ்ச்சியை சந்தித்தது. இருந்தபோதிலும், எதிர்காலம் உட்பட ஏனைய அனைத்து அம்சங்களிலும் உள்ள நேர்மறை சிந்தனைகளில் எவ்வித மாற்றமும் இல்லை.

**பலமான எதிர்தாக்கம்**

வாகனத்துறை, நிர்மாணம், விவசாயம், சக்திவலு, நீர் மற்றும் சுகாதார பராமரிப்பு போன்றவை குழுமத்தின் அதிஷ்டம் தங்கியுள்ள பிரதான துறைகளாகும். தனிப்பட்ட ரீதியில் எடுத்துக்கொண்டால், இவை அனைத்தும் தமக்கேன சவால்களைக் கொண்டுள்ளன. இவை நாட்டின் பெரும் பொருளாதார குறிகாட்டிகளில் வெளிப்படுத்தவில்லை. இறக்குமதி தடை காரணமாக வாகன இறக்குமதியின்றியும் மற்றுமொரு நிதியாண்டை நாம் பூர்த்தி செய்துள்ளோம். இருப்பினும் நிதியாண்டின் இறுதியில் தடை நீக்கப்பட்டது, இது வாகனத்துறையின் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. உட்கட்டமைப்புடன் தொடர்புடைய முதலீடுகள் சரிவடைந்தமை, பொருளாதார நெருக்கடியின் விளைவுகள் என்பன மிகவும் பலமான முறையில் நிர்மாணத்துறையை பாதித்தன. சக்திவலு மற்றும் நீருடன் தொடர்புடைய வர்த்தகங்கள் பல திட்டங்களை முடக்கின. இதன்

விளைவாக வர்த்தகங்கள் குறைவடைந்ததுடன், நிறைவடைந்த வேலைக்கான கட்டணத்தை பெறுவதில் சவால்கள் ஏற்ப்பட்டன. உட்கட்டமைப்பு துறையின் மறுசீரமைப்பு மிகவும் குறைந்த வேகத்திலேயே இடம்பெற்றது. இது குறித்த துறையுடன் தொடர்புடைய வர்த்தகங்களை பாதித்தது. இதனால், நிர்மாணத்துறைக்கான இயந்திரங்கள், வர்த்தக ரீதியிலான கனரக வாகனங்கள் மற்றும் நிர்மாணத்துறைக்கு கைகொடுக்கும் வர்த்தக நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் ஏனைய வாகனங்களுக்குமான தேவை குறைந்தது.

விவசாயம், உள்ளீட்டு வர்த்தக வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது, இந்த தீவிரம் காரணமாக விளிம்பு நிலை வீழ்ச்சியால் கடுமையான வருவாய் இழப்பு ஏற்ப்பட்டது.

## “செயலாற்றலின் ஊக்கம்”

நிறுவனம் எதிர்கொண்ட சாவல்கள் மற்றும் தடைகளை கடந்த, எதிர்வரும் ஆண்டில் வருவாய் மற்றும் வளர்ச்சியை நோக்கி பயணிப்பதற்கான அறிகுறிகள் வெளிப்பட்டுள்ளன.

நாம் முன்னேற்றமடையும் போது, எமது பிரதான மூலோபாயங்களில் கவனம் செலுத்துகின்றோம். அத்துடன் எமது வரையறை முழுவதும் வளர்ச்சியை நகர்த்த உறுதி எடுத்துள்ளோம். பன்முகப்படுத்தல், வேறுபடுத்தல் மற்றும் ஒத்துழைப்புக்கான முயற்சிகள் எமது அணுகுமுறையின் அடிக்கல்லாக என்றும் தொடரும்.

(page 2)

## தலைவரின் செய்தி

அன்புக்குரிய பங்குதார்களே,

விவசாய உள்ளீடுகளுக்கான சந்தையிலுள்ள போட்டித்தன்மை. வானிலை முறைமைகளில் ஏற்ப்பட்ட மாற்றங்களும், இருப்பு அதிகரிப்பை தவிர்க்கவும் குறைந்த இலாபத்தில் இருப்புக்களை அகற்ற வழிவகுத்தன. விவசாயத்துடன் தொடர்புடைய ஏற்றுமதியில் முதலீடு உள்ளிட்ட விவசாய பிரிவின் முதலீடுகளும் ஆண்டின் வீழச்சியில பங்களிப்பு செலுத்தியது. இந்த முதலீடுகளின் வருவாய் வழிகள் எதிர்பார்த்ததை விடவும் மந்தமாகவே இருந்தது.

உயிரியல் - மருத்துவ உபகரணங்களினால் போஷிக்கப்படும் சுகாதார பராமரிப்பு பிரிவானது இதனைப் போன்று அரச துறை உட்பட தனியார் துறையிடமிருந்து கடும் கேள்வி பற்றாற்குறையை எதிர்கொண்டது.

### செயல்திறன் மீதான புதிய முதலீடுகளின் தாக்கம்

கடந்த சில வருடங்களாக மூலோபாய கையகப்படுத்தல்கள் அல்லது மூலோபாய புதிய முயற்சிகளில் பங்கேற்பதை நாம் மேற்கொண்டோம். இந்த முதலீகளின் பெரும்பான்மை விவசாய பிரிவுடன் தொடர்புபட்டிருந்தன. குறித்த துறையில் எமது தடத்தை அதிகரிப்பதன் மூலம் விவசாயம் சார்ந்த வர்த்தகத்தை ஒருங்கிணைப்பது, விவசாய உள்ளீடுகள், பெறுமதி சேர்ப்பு மற்றும் விவசாய வெளியீடுகளில் எமது இருப்பை மேம்படுத்துவதே விவசாயம் சார்ந்த விரிவாக்கங்களில் நாம் ஈடுபடுவதற்கான முக்கிய காரணமாகும். இது ஏற்றுமதியையும் உள்ளடக்கியுள்ளது. இவை எமது மூலோபாய முன்னுரிமைகளுக்கு ஏற்ப உள்ளன. எவ்வாறெனினும், இந்த முதலீடுகளில் பெரும்பான்மையானவை எதிர்பாரத்த வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்த்த நேரத்தை விடவும்

அதிக நேரம் எடுத்தது. வருடத்திற்கான வீழ்ச்சியில் இந்த தாமதங்கள் அதிகளவில் பங்களிப்பு செய்திருந்தன. தேங்காயின் விலை அதிகரிப்பும் மற்றுமொரு காரணமாகும். சுத்தமான தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பால், மற்றும் கரி உற்பத்தி துறைகளில் எமது முயற்சிகளை இந்த விலை அதிகரிப்பு மோசமான முறையில் பாதித்தது.

வர்த்தக ஏற்புகளின் சேகரிப்பு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது, இது உண்மையில் அண்மைக்கால பொருளாதார நெருக்கடியில் தாக்கம் செலுத்தியது. இருப்பினும் நிதியாண்டின் பிற்பகுதியில் ஏற்ப்பட்ட முன்னேற்றங்கள் சுட்டிக்காட்டும் வகையில் இருந்தன.

**மூலோபாய திசை**

பன்முகப்படுத்தல், வேறுபடுத்தல் மற்றும் ஒத்துழைப்பை வளர்ச்சிக்கான மூலோபாய தூண்களாக நாம் தொடர்ச்சியாக பின்பற்றுகின்றோம். தொழில்நுட்பம், மக்கள் மற்றும் நிலைத்தன்மை ஆகிய மூன்று பகுதிகள் இந்த மூலோபாயங்கள் ஊடாக உயிர்ப்பிக்கப்படுகின்றன.

**உள்வாரியாக நோக்குதல்**

பின்புலத்திலுள்ள பல்வேறு வகையிலான பாதகங்களுக்கு எதிரான செயற்பாடுகள். எமது பிரதான பிரிவுகள் சாத்தியமான பெறுபேறுகளை உருவாக்குவதற்கு வழிவகுத்துள்ளன. விவாயத்துறை உட்பட மேலும் சில வர்த்தகங்களினால் ஏற்பட்ட இழப்புகளை முழுமையான ஈடு செய்ய முடிந்தது.

மிகவும் இக்கட்டான காலகட்டத்தில், விவசாய உள்ளீடுகள் போன்ற புதிய வரத்தகத்துடன் தொடர்புடையதாக பெறப்பட்ட வருமான வழிகள் ஊடாக இந்த குழுமம் தொடர்ந்து பயணித்தது. இருந்த போதிலும்

விவரிக்கப்பட்ட காரணங்களால் 2024/25 நிதியாண்டுகளில் இந்த நிலைமை நீடிக்கவில்லை. மூலோபாய நெகிழ்வுகளுடன் எமது அணுகுமுறைகளை உருவாக்கினோம். விவசாய உள்ளீடுகள் துறையானது அடுத்த ஆண்டில் மிகவும் சிறப்பாக செயல்திறனை வெளிக்காட்டுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வாகனங்கள் மீதான நீடித்த இறக்குமதி தடை, வாகனத் துறை வர்த்தகத்தில் எமது முதலீடுகளை நியாயப்படுத்தியது. சில சந்தர்ப்பங்களில் நாடு முழுவதிலுமுள்ள வாடிக்கையாளர் தொடர்புகள் பின்பற்றப்படாமல் போனது. வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில், இந்த பிரிவில் எமது தடத்தை மேம்படுத்துவது குறித்து நாம் கவனம் செலுத்தினோம். ட்ரெக்டர்ஸ் மற்றும் அறுவடை உந்தல்கள் ஊடான இந்த விவசாய இயந்திரங்களின் வர்த்தகமானது, எதிர்காலத்திற்கு நல்ல சந்தர்ப்பங்களை காண்பிக்கும் திருப்திகரமான தீர்வுகளை வழங்கின. வாகன சந்தையில் ஏற்படும் அபிவிருத்திகள் தொடர்பில் நாம் கூர்ந்து கவனிக்கின்றோம். அத்துடன் அதன் சாவல்களை எதிர்கொள்வதற்கும் தயாராகவுள்ளோம்.

பௌதீக பன்முகத்தன்மையை பொருத்தமட்டில், பங்களாதேஷில் எமது நிர்மாண இயந்திர வர்த்தகம் சந்தையில் அதன் உரிய இடத்தை பிடிக்கும் அளவிற்கு முதிர்ச்சியடைந்துள்ளது. அத்துடன் கல்வித் துறையில் எமது எதிர்கால தடம் குறித்து வரைபை வரைந்துள்ளோம். DIMO தொழில்நுட்ப ஆய்வுகளுக்கான கல்விபீடத்தை (DATS) அதிகரித்த கொள்ளளவுடன் சௌகரியமான இடத்தில் மீள அமைக்கப்படுவதன் ஊடாக விரிவாக்கத்திற்கான முதற்கட்ட நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.

கடந்த சில ஆண்டுகளில் கையகப்படுத்தல்கள் மற்றும் பன்முகப்படுத்தல் ஊடாக சுகாதார பராமரிப்பு பிரிவானது சிறந்த வரையறைகளைப் பெற்றுள்ளது. அண்மையில் கையகப்படுத்தப்பட்ட இரண்டு துணை நிறுவனங்கள் மூலம் ஔடதங்கள் வர்த்தகத்தில் தீவிரமான நடுத்தர கால வளர்ச்சியினை நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

## தொழில்நுட்ப பரிணாமம்

புத்தாக்கம் மற்றும் செயல்திறனில் எமது மூலோபாயம் கவனம் செலுத்துவதற்கமைய, SAP ஐ செயற்படுத்துவது டிஜிட்டல் பரிணாமத்தை நோக்கிய எமது பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். மேம்பட்ட தொழிற்துறை வளங்கள் திட்ட கட்டமைப்பு, எமது செயற்பாடுகளை மேலும் நெறிப்படுத்தவும், அனைத்து வர்த்தக பிரிவுகளிலும் செயன்முறைகளை திறமையான முறையில் ஒருங்கிணைக்கவும் எமக்கு உதவுகிறது. SAP யின் இயலுமைகளை கையாள்வதன் மூலம் தரவு தெரிவுநிலை, தீர்வு எடுப்பதன் மேம்பாடு மற்றும் சந்தை நகர்வுகளுக்கு விரைவாக பதிலளிக்கும் வகையில் எமது திறனை பலப்படுத்துவதை நாம் அதிகரித்துள்ளோம். SAP நிலைமைகளை ஏற்றுக்கொள்வது இன்று துரிதமாக மாறிவரும் வர்த்தக சூழலின் சிக்கல்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள எமது நிறுவனத்தை நம்பிக்கையான முறையில் நிலைநிறுத்துகிறது. ஒரு பிரதான செயற்பாட்டாளராக, துறைசார் போக்குகள் மற்றும் சந்தையிலுள்ள போட்டித்தன்மைக்கு மத்தியில் எம்மை வேகமாக தக்கவைக்க அல்லது முன்னோக்கி இருப்பதற்கு எம்மை இது அனுமதிக்கிறது. இந்த மாற்றம் எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் மாற்றமடையக்கூடிய திறன் கொண்டவர்களாகவும், மீள்தன்மை கொண்டவர்களாகவும் இருப்பதை உறுதிசெய்தது. வளர்ச்சியின் அடிக்கல்லாக தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் எமது உறுதியை சுட்டிக்காட்டுகிறது.

## எமது மக்கள்

பாராம்பரியமாக, DIMO ஒரு நிறுவனமாக இருந்து தமது மக்களின் முன்னேற்றத்தில் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த எதிர்பார்ப்புகளை பெறும் வகையில் கடந்த காலங்களில் நாம் எமது

ஊழியர்கள் மீது முதலீடு செய்துள்ளோம். ஆய்வுக்குட்பட்ட நிதியாண்டில் தொடர்ச்சியாக 13வது வருடமாகவும் “வேலை செய்வதற்கு சிறந்த இடமென” DIMO அங்கீகரிக்கப்பட்டுள்ளதை உங்களுக்கு தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

**நிலைத்தன்மை**

நவீன வர்த்தக வெற்றி, நிறுவன இயக்க வழியை மெருகூட்டல், புத்தாக்கம் மற்றும் வளர்ச்சியில் நிலைத்தன்மையானது ஒரு அடிக்கல்லாக வெளிப்பட்டுள்ளது. DIMO வை பொருத்தமட்டில், நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்பு என்பது ஒரு நெறிமுறை கட்டாயம் மாத்திரமன்றி ஒரு மூலோபாயக் கடமையுமாகும்.

**(page 3)**

எமது செயற்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்திலும் நிலையான ஈடுபாட்டை செலுத்துவதன் மூலம், எமது பங்குதாரர்களுக்கான நீண்ட-கால பெறுமதியை நாம் பாதுகாக்கின்றோம். பொருளாதார நிலைத்தன்மையின் மீதான இந்த கவனம் மாற்றமடையும் சந்தை நகர்வுகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளுக்கு மத்தியில் நாம் மீள்தன்மையுடன் இருக்க உதவுகின்றது.

மாற்றத்திற்கான வரைபடத்தை கோடிட்டுக் காட்டுவதன் ஊடாக எமது நிலைத்தன்மை நிகழ்ச்சி நிரல்'' இந்த அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. கார்பன் தடயத்தை குறைத்தல், வளங்களின் செயற்திறனை அதிகரித்தல் மற்றும் எமது பல்வேறு வணிக பிரிவுகளில் உள்ளடக்கத்தை வளர்ப்பது போன்ற இலட்சியங்கள் இருந்தாலும் அடையக்கூடிய இலக்குகளை இந்த நிகழ்ச்சி நிரல் உள்ளடக்கியுள்ளது. மீள்புதுப்பிக்கதக்க சக்திவலு, சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பம் மற்றும் மூலோபாய கூட்டாண்மையில் இலக்குமிகு முயற்சிகள் இருந்தபோதிலும், எமது வளர்ச்சிப் போக்கினை நிலைத்தன்மையின் கொள்கைகளுடன் இணைப்பது எமது இலக்காகும். புத்தாக்கம் மற்றும் ஒத்துழைப்பில் கவனம் செலுத்துவதன் ஊடாக நிகழ்ச்சி நிரலானது உலகளாவிய ரீதியில் சிறந்த செயல்கள் மற்றும் தரநிலைகளுடன் இணங்குவதை உறுதி செய்வது மாத்திரமன்றி DIMOவை பொறுப்புவாய்ந்த வர்த்தக செயற்பாடுகளில் முன்னோடியாக நிலைநிறுத்தியுள்ளது. அவ்வாறு செய்வதன் ஊடாக நோக்கத்துடன் இலாபத்தை சமப்படுத்த எமக்கு அதிகாரமளிக்கிறது. அத்துடன் நீடித்த முன்னேற்றத்தின் மரபை உருவாக்குகிறது.

## முன்னோக்கிய பார்வை

தடைகள் மற்றும் சவால்களை நிறுவனம் கடந்து சென்று எதிர்வரும் ஆண்டில் இலாபம் மற்றும் வளர்ச்சியை நோக்கிச் செல்வதற்கான அறிகுறிகள் உள்ளன. நிறுவன சந்தை திறப்பானது எமது வருவாய் நிலைத்தன்மையை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது. உட்கட்டமைப்பு திட்டங்களின் மீள் வருகை மற்றும் சக்திவலு நீர் சார்ந்த திட்டங்களின் ஆரம்பம் என்பன வருமானத்தை அதிகரிப்பதற்கான ஊக்க சக்திகளாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மூலோபாய மாற்றங்களினால் விவசாய பிரிவு இலாப வழிக்கு திரும்புமெனவும், இதன் பங்களிப்பு நேர்மறையாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வியாபார திட்டங்கள் திருப்திகரமான வருமானத்தை வழங்குவதற்கென நிதி செயல்திறனில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கின்றன.

நாம் முன்னோக்கிச் செல்லும் போது, எமது பிரதான மூலோபாயத்திலும் எமது வரையறை முழுவதும் வளர்ச்சியை கொண்டு செல்வதற்குரிய பொறுப்பிலும் கவனம் செலுத்துகின்றோம். பன்முகப்படுத்தல், வேறுபடுத்தல் மற்றும் ஒத்துழைப்புக்கான எமது பிரயத்தனங்கள் எமது அணுகுமுறைக்கான அடிக்கல்லாக தொடரும். சவால்களை எதிர்கொண்டு வாய்ப்புக்களை தக்கவைத்துக்கொள்ளும் எமது திறனில் நாம் நம்பிக்கையுடன் உள்ளோம்.

## மீள்தல்

ஆண்டுக்கான பெறுபேறு 2024/25 நிதியாண்டுக்கான ஈவுத்தொகை குறித்த உத்தரவாத பிரகடனத்தை வழங்கவில்லை. இருப்பினும், வெளிவாரியான காரணங்கள் மற்றும் விவசாயம் போன்ற குறிப்பிடத்தக்க பிரிவுகளின் மூலோபாய மாற்றங்கள் விரும்பத்தக்க மாற்றங்களின்

எதிர்பார்ப்புடன் 2024/25 நிதியாண்டில் திருப்திகரமான பெறுபேறுகளை மீளப் பெற்றுக்கொடுக்கும் பாதையில் உள்ளது.

**ஒப்புதல்**

இலங்கையில் நேர்த்தியான தீர்வுகளை வழங்க ஒத்துழைப்புடன் பணியாற்றும் எம்மிடம் சிறந்த தரமான கொள்கைகள் இருப்பது DIMO வின் பெறுமிதமாகும். DIMO வின் முக்கிய பகுதிகளில் ஒன்றான சூழல் கட்டமைப்பு DIMO வின் பரிணாம வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது. இன்றுள்ள DIMO வை வடிவமைப்பதற்கான அவர்களின் துணிச்சலை நான் பாராட்டுகின்றேன். அத்துடன் பல வருடங்களாக DIMO வின் வெற்றிக்கு பங்காற்றிய ஒவ்வொரு வெளிநாட்டு கொள்கைகளுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

எனது முகாமைத்துவ குழுவின் தலைமையில் எனது பழமையான உறுப்பினர்கள், தூரநோக்குடனும், உறுதியாகவும் சவால்களை எதிர்கொள்ள நெருக்கமாக பிணைக்கப்பட்ட ஒரு பிரிவாக பணியாற்றி வருகின்றனர். பணிப்பாளர் குழு எப்பொழுதும் என்னை பலப்படுத்துகிறது. அத்துடன் அவர்களின் விலைமதிப்பற்ற ஆலோசனைகள் இக்கட்டான காலகட்டத்தை கடக்க உதவியாக இருந்தது. அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

உங்கள் நம்பிக்கைக்குரிய,

**ரன்ஜித் பண்டிதகே**
தலைவர்

2025 ஜூன், 05
கொழும்பு